[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1991 செப்டம்பர் 11

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் முழு கூட்டத் தொடரிலிருந்தும் நீக்கப்பட்டார்கள் என்ற நேரத்தில், திரு. திருநாவுக்கரசு அவர்கள் அப்போது அந்த வரிசையில் அமர்ந்து கொண்டிருந்த நேரத்தில், அதற்கு அவர் ஏன் வக்காலத்து வாங்கவில்லை என்பதை அவர் தெரிவிக்கவேண்டும்.

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விவாதத்தில் இதற்கு மேல் வேண்டாம். முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். அந்த வேண்டுகோளை ஏற்று அந்த சம்பந்தப்பட்ட உறுப்பினர் வருத்தம் தெரிவிப்பார்களேயானால் அதற்குப் பிறகு என்னுடைய முடிவை அதன்மீது அறிவிக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

நிலக்கரி கிடைக்காத காரணத்தால் சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்துக் கவன ஈர்ப்பு. திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''இம்மாநிலத்தில் நிலக்கரி கிடைக்காத காரணத்தால் சிறு தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து'' என்ற கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

HON. THIRU MOHAMED ASIF : Hon'ble Speaker Sir, the reply for the Hon'ble Member D. Sudarsanam's call attention is as follows :

''The department of Industries and Commerce has obtained an allocation of 176 wagons of Steam Coal and 160 wagons of Slack coal''..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் '' A statment is placed on the Table of the House'' என்று சொன்னால் போதும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

HON. THIRU MOHAMED ASIF : Mr. Speaker Sir, A statement has been placed on the Table of the House.

அறிக்கை.

கல்கத்தாவிலுள்ள இரயில் இயக்கச் செயலாக்க இயக்குநர் அவர்கள் மூலமாக 1991ஆம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு 176 சரக்குப் பெட்டிகள் நீராவி நிலக்கரியும் 116 சரக்குப் பெட்டிகள் நடுத்தர நிலக்கரியும் (Slack coal) தொழில் மற்றும் வணிகத்துறை பெற்றுள்ளது. நீராவி நிலக்கரி தொழிற்சாலை உபயோகத்திற்கும் செங்கல் சூளையில் தொடக்கத் தீயேற்றுவதற்கும் நடுத்தர நிலக்கரி பயன் படுத்தப்படுகின்றது. செங்கல் மற்றும் ஓடுகள் தயாரிக்கப் படும் சூளைகளில் முறையான உபயோகத்திற்குப் பயன் படுத்தப்படுகின்றது.

2. தமிழ்நாடு செங்கல் மற்றும் ஓடுகள் சங்கம் தலைமைச் சங்கம் ஆகும். இச்சங்கம் நிலக்கரிக்கான தேவைப்பட்டியலை அனுப்பி நிலக்கரியைப் பெற்று அதை செங்கல் மற்றும் ஓடுகள் பிரிவுகள் உள்ளிட்ட சிறுதொழில் நிறுவனங்களுக்கு, சென்னையிலுள்ள கிடங்குகள் மூலமும் வேலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், மதுரை மற்றும் செங்கல்பட்டு ஆகிய நகரங்களில் உள்ள கிடங்குகள் மூலமும் விநியோகம் செய்கின்றது.

3. சிறு தொழில் நிறுவனங்களின் சராசரி மாதத்தேவை 1,000 மெட்ரிக் டன்களாகும். ஆதலால் இரயில் இயக்கச் செயலாக்க இயக்குநரிடமிருந்து துறையின் மூலம் பெறப் பட்ட ஒதுக்கீடு சிறுதொழில் நிறுவனங்களின் தேவைக்குப் போதுமானதாகும்.

4. 1-8-1991-ம் தேதிய மொத்த இருப்பு விவரப்படி நீராவி நிலக்கரி 1,590 மெட்ரிக் டன்களும், நடுத்தர நிலக் கரி 1,970 மெட்ரிக் டன்களும் ஆகும். அவற்றின் விவரம் பின்வருமாறு:—

சங்கத்தின் பெயர். (1)	நீராவி நிலக்கரி. (2)	நடுத்தர நிலக்கரி. (3)
	(மெட்ரிக் டன்களில்.)	
1. தமிழ்நாடு செங்கல் மற்றும் ஓடுகள் கழகம், சென்னை-30.	412	1,252
2. வேலூர்	198	214
3. திருச்சிராப்பள்ளி ..	384	..
4. கோயம்புத்தூர் ..	204	..
5. சேலம்	277	..
6. மதுரை	115	..
7. செங்கல்பட்டு ..	..	504
மொத்தம் ..	1,590	1,970

5. 1990-91ஆம் ஆண்டில் நிலக்கரி கிடைக்காமை பற்றிப் புகார்கள் எதுவும் சிறுதொழில் நிறுவனங்களிலிருந்தோ அல்லது சிறுதொழில் நிறுவனங்களின் சங்கங்களிலிருந்தோ வரவில்லை. இருப்பினும், தமிழ்நாடு செங்கல் மற்றும் ஓடுகள் கழகத்தின் முன்னாள் தலைவரிடமிருந்து, இந்திய நிலக்கரி நிறுவனத்திற்கும் சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கங்களுக்கும் எழுதிய கடிதத்தின் நகலொன்று வரப்பெற்றுள்ளது. அதில் மேற்படி கழகத்திற்கான வரத்துக்கள் குறைவாக உள்ளன வென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கழகத்தின் முன்னாள் தலைவரிடமிருந்து இக்கடிதம் பெறப்பட்டவுடன் இந்திய நிலக்கரி நிறுவனத்தின் தலைவருக்கும் சிங்கரேணி நிலக்கரி சுரங்கங்களின் தலைவருக்கும் நிலக்கரி அனுப்புவதை விரைவுபடுத்துமாறு தொழில் மற்றும் வணிகத்துறை ஒரு கடிதம் எழுதியுள்ளது.

6. இவ்வாறாக, சிறுதொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரை நிலக்கரி பற்றாக்குறை இல்லையென்பது தெரியவரும்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கக் குறிப்பிலே முதல் பாராவிலே 176 வாகன்கள் ஸ்டீம்கோல் என்றும் 116 வாகன்கள் ஸ்லேக் கோல் என்றும் குறிப்பிடப்பட்டு முன்னுக்குப் பின் முரணாக மூன்றாவது பாராவிலே மாதம் ஆயிரம் மெட்ரிக் டன்கள் தான் சிறு தொழில்களுக்கு தேவை என்றும் தவறான ஒரு தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அதிகாரிகள் வழங்கியிருக்கிறார்கள் என்று நான்

1991 செப்டம்பர் 11] [திரு. டி. சுதர்சனம்]

கருதுகிறேன். முதல் பாராவிலே 176 டன் என்று சொல்லும்போது மாதம் ஒன்றுக்கு 10,200 டன்கள் ஆகும். அதேபோல தூள் கரி 116 வாகன்கள் என்று சொன்னால் 6,600 டன்கள் ஆகும். கடந்த 8 மாதங்களாக, ஜனவரி மாதம் முதல் தமிழகத்திற்கு 84,000 டன் நிலக்கரியை மத்திய அரசாங்கம் மேற்கத்திய நிலக்கரி சுரங்கத்திலிருந்து ஒதுக்க வேண்டும். அதேபோல 55,200 டன் தூள் கரியை ஒதுக்க வேண்டும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். அதிலே உங்களுக்கு இருக்கக்கூடிய சந்தேகத்தை கேள்விகாகக் கேட்க வேண்டும். அப்போதுதான் அமைச்சர் பதில் சொல்வதற்கு சரியாக இருக்கும். இப்போது ஒரு கேள்வியைக் கேட்கலாம், அடுத்து ஒரு கேள்வியும் கேட்கலாம். ஆகவே கேள்வியாகக் கேளுங்கள். திரு. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : கேள்விதான் கேட்கிறேன். 84 ஆயிரம் டன் கட்டிக்கரியை ஒதுக்கி இருக்க வேண்டும். 55 ஆயிரம் டன் தூள் கரியை ஒதுக்கி இருக்க வேண்டும், ஒதுக்கியதிலே தமிழகத்திற்கு 14,400 டன் கட்டி கரியும் 4,500 டன் தூள் கரியும் தான் வந்திருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலே சிறு தொழில்களுக்கு ஆயிரம் மெட்ரிக் டன் கரி தமிழ்நாட்டிற்கு முழுவதும் போதும் என்ற தவறான தகவலை தந்திருக்கிறார்கள். இன்றைக்கு அதிகமான அளவு தமிழகம் முழுவதும் நிலக்கரி பற்றாக்குறை இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் கவனத்திற்கும் அமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். அதை விளக்க முன் வருவார்களா ?

மாண்மிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய கேள்வி என்ன அதைச் சொல்லுங்கள்.

திரு. டி. சுதர்சனம் : 3-வது பாராவிலே ஆயிரம் டன் சிறு தொழிலுக்கு போதும் என்று சொல்லுகிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றிய விளக்கம் என்ன என்று கேட்கிறீர்களா ?

திரு. டி. சுதர்சனம் : ஆமாம். அதுபற்றிய விளக்கம் என்ன ?

HON. THIRU MOHAMED ASIF : Hon'ble Speaker Sir, I only state that the average demand of the Small Scale Industrial Units is on the order of 1000 M.T. per month. Hence the allocation obtained by

the Department from the Executive Director at the moment is sufficient for meeting the demands of Small scale Industrial Units. The details are given as follows :

As on 1-8-1991 there is a total stock of 1590 M.Ts. of Steam Coal and 1970 M.Ts. of slack coal as detailed below :

Name of the Society.	Steam coal M.Ts.	Slack Coal M.Ts.
1. Tamil Nadu Brick and Tiles Society, Madras-30	412	1,252
2. Vellore	198	214
3. Tiruchirappalli	384	-
4. Coimbatore	204	-
5. Salem	277	-
6. Madurai	115	-
7. Chengalpattu	..	504
Total ..	1,590	1,970

No complaint has been received from any Small Scale Industrial Unit or Small Scale Association regarding non-availability of coal during 1991. However one copy of the letter from the Ex-President of Tamil Nadu Brick and Tiles Society addressed to the Coal India Limited and Singareni Coal Limited stating that the arrival to the Society is very poor. On receipt of this letter from the Ex-President of the Society the Department of Industries and Commerce has requested the Chairman, Coal India Limited and the Chairman, Singareni Coal Limited to step up the despatches. Thus it can be seen that there has been no shortage of coal as far as the Small Scale Industries are concerned.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிறு தொழில் நிறுவனங்கள் பொறுத்தவரையில் அந்த அளவிற்கு பெரிய அளவிற்கு ஷார்ட்டேஜ் இல்லை என்பதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்களுக்கு மாதம் ஒன்றுக்கு 176 வேகன்கள் என்று முதல் பாராவிலே அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். 176 வேகன்கள் என்பது 10,200 டன்கள் என்று 20 ஆண்டுகளுக்கு முன்னாலேயே மத்திய அரசாங்கத்திலே தமிழ் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட வேகன்கள். ஆனால் 20 ஆண்டுகளாக உபரியாக ஒதுக்கப்படவில்லை. 10,200 டன்கள் என்பது 20 ஆண்டுகளுக்கு முன்னாலே

ஒதுக்கப்பட்டது. இன்று வளர்ந்து வந்திருக்கிறது. ஆனால் தவறான தகவல்கள் மூலமாக அமைச்சர் அவர்கள் மூன்றாவது பாராவிலே ஆயிரம் மெட்ரிக் டன்கள்தான் தேவை என்று குறிப்பிடுகின்றார். அதிகாரிகள் தவறான தகவல்கள் கொடுத்திருக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் மனதிலே கொண்டு தகுந்த பரிகாரம் காண வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதே போன்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில் குறிப்பாக அமைந்தக்கரை போன்ற பகுதிகளில் மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் போன்ற தொழில் அதிபர்கள் நடத்துகின்ற இந்த செங்கல் தொழிலில் இந்த நிலக்கரி பிரச்சினை என்பது ஏதோ இந்த ஆட்சியிலே வருகின்ற பிரச்சினை அல்ல. அது தொடர்ந்து தொய்வு இல்லாமல் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக எங்களுடைய இனிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் உங்களுக்குத் தெரியும். ஆந்திராவிலே அன்றைக்கு கடிதம் எழுதி நீங்களே வந்து என்னைப் போன்றவர்களைக் கேட்டு கடிதம் எழுதி பெற்றுக் கொடுத்திருக்கிறோம். அதே போல நீங்கள் இன்றைக்கு கிளப்பியிருக்கின்ற பிரச்சினையை அனுதாபத்தோடு எங்கள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கவனத்திலே கொண்டு விரைவிலே உங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்வார் என்ற உறுதியை கூறுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபொழுது மாதத்திற்கு சராசரி ஆயிரம் மெட்ரிக் டன் என்று சொன்னார்கள். அப்படியென்றால் வருடத்திற்கு 12,000 மெட்ரிக் டன் என்றுதான் ஆகும்.

திரு. டி. சுதர்சனம் : தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு கேள்வி முடிந்துவிட்டது. உங்களுடைய கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. உங்களுடைய கேள்வியும் முடிந்தது.